# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044- 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 886/2016

ஆணை எண். 22/2017

நாள் : 23/02/2017

திரு. சி.ஜே. ராஜ்காந்த்,
சென்னை – 122. – முறையீட்டு மனுதாரர்

மாநகராட்சி ஆணையர்,
திருப்பூர் மாநகராட்சி,
திருப்பூர். – எதிர் மனுதாரர்

சென்னை, கொளப்பாக்கம், 30 அடி சாலை, 16, M.R.K. நகர் முகவரியில் வசிக்கும் திரு C.J.ராஜ்காந்த், அவர்களது 29.08.2016 நாளிட்ட முறையீட்டு மனு, இம்முறைமன்ற நடுவத்தில் 29.08.2016 அன்று பெறப்பட்டு 886/2016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மேற்குறிப்பிட்ட முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:-

## ஆணை

சென்னை, கொளப்பாக்கம், 30 அடி சாலை, 16, M.R.K. நகர் முகவரியில் வசிக்கும் திரு.C.J. ராஜ்காந்த் அவர்கள், திருப்பூர் மாநகராட்சி பகுதியில் புல எண்.26/30A, நகர புல அளவை எண்.9/32–ல் தனக்குச் சொந்தமான நிலம் உள்ளதாகவும், அந்த நிலத்தில் வீடுகட்டுவதற்கு மாநகராட்சிப் பொறியாளர்களை அணுகியதாகவும், அந்நிலத்தில் சாலை அமைய உள்ளதால் வீடு கட்டுவதற்கு அனுமதி வழங்க மறுத்துவிட்டனர் என்றும், ஆனால் சாலை அமைப்பதற்குத் தேவையான நிலத்தைக் கையகப்படுத்துவதற்கான எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை எனவும், இது குறித்து உரிய விசாரணை மேற்கொண்டு தனக்கு வீடு கட்ட கட்டிட அனுமதி வழங்க ஆவண செய்யக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. மனுதாரரின் முறையீடு சம்பந்தமாக திருப்பூர் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண். 886/2016, நாள்:02.09.2016 மூலம் கோரப்பட்டு, மேற்படி அறிக்கை ஆணையாளர், திருப்பூர் மாநகராட்சி கடிதம் ந.க.எண்.10763/2011/இ4, நாள் 08.11.2016 மூலம் இம்முறைமன்ற நடுவத்திற்கு 15.11.2016 அன்று பெறப்பட்டது. மேற்படி அறிக்கையில், முறையீட்டு மனுதாரர் கட்டிட அனுமதி வழங்கக் கோருமிடம், திருப்பூர் மாநகராட்சிக்குட்பட்ட அங்கீகரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தித் திட்டம் எண்.7–ல் 'B-B' 60 அடி

அகல திட்டச்சாலை அமைவதால் கட்டிட அனுமதி வழங்க இயலாது என்றும், மனுதாரர் கோரிக்கையின் பேரில் நகர் ஊரமைப்புத் துறைக்கு மட்டுமே அதிகாரம் உள்ளது என திருப்பூர் மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும், மனுதாரர் தனது நிலத்தினைத் தானமாக அளித்தால் மட்டுமே மேற்குறிப்பிட்ட திட்டச்சாலை முழுமையடையும் என்றும் தெரிவித்துள்ளார். மேலும் இந்நேர்வில், திருப்பூர் மாநகராட்சி அறிவிப்பு ந.க.எண.இ4/10763/2011, நாள் 18.01.2012 மூலம் நிலங்களைக் கையகப்படுத்தத் தேவையான நிதி வழங்கப்படுவதில்லை என்று தெரிவித்து நிலஉடமைதாரர்கள் நிலத்தை தானமாக அளிக்க முன்வரவேண்டும் என முறையீட்டு மனுதாரருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டு உள்ளது. எனினும், நிலங்கள் தானமாகப் பெற இயலாத நிலை ஏற்பட்டால், நிலங்களை கையகப்படுத்த அரசு அனுமதி பெற்று வருவாய்த் துறைக்கு உரிய முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்படுமெனவும் பொதுத் தகவல் அலுவலர், திருப்பூர் மாநகராட்சி, ந.க.எண்.பி 7/1873/2012, நாள் 28.02.2012–ல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. முறையீட்டு மனுதாரரிடம் 24.11.2016 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. மேற்படி விசாரணையில் முறையீட்டு மனுதாரர் திருப்பூர் விரிவு அபிவிருத்தித் திட்டம் ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னர் தொடங்கப்பட்டும் இதுவரையும் நடைமுறைப்படுத்தப்படாமல் உள்ளது எனவும் சிவன் தியேட்டர் நில உரிமையாளரைத் தவிர்த்து மற்ற நிலவுடமைதாரர்களிடம் நிலத்தை தானமாகப் பெற முடியாத நிலையில் இத்திட்டம் முடங்கிய நிலையில் உள்ளதென்றும், இத்திட்டம் செயல்படாத நிலையில் வீடுகட்ட அனுமதியும் வழங்கப்படுவதில்லை என்றும் அதனால் பொதுமக்கள் தங்களது நிலங்களை விற்கவோ அல்லது வாங்கவோ சிரமத்திற்குள்ளாகியுள்ளனர் என்றும் இப்பகுதியில் நிலத்தை தானமாகத் தரவேண்டுமென்று மிரட்டப்படுவதாகவும் செயல்படாத திட்டத்தை உருவாக்கி பொதுமக்களுக்கு இடையூறு செய்வதால் அரசுக்கு அவப்பெயர் வருவதாகத் தெரிகிறது என்றும் தெரிவித்து செயல்படுத்த வழியில்லாத இந்தத் திட்டத்தை இரத்து செய்ய உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

4. முறையீட்டு மனுதாரரிடம் விசாரணை மேற்கொள்ளப்பட்ட அதேநாளில் (24.11.2016), திருப்பூர் மாநகராட்சி உதவிப் பொறியாளர் திரு. க. ஆறுமுகம் அவர்களிடமும் விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி விசாரணையில் இத்திட்டம் செயல்படுத்தப்படாமல் இருப்பது குறித்து அரசுக்கோ அல்லது உயர் அதிகாரிகளுக்கோ எந்தவித தகவலும் தெரிவிக்கவில்லை என்று தெரிவித்தார். திருப்பூர் மாநகராட்சியில் 2005 முதல் 2009 வரை நகரமைப்பு அலுவலராகப் பணியாற்றி தற்பொழுது செயற்பொறியாளராகப் பணியாற்றி வரும் திரு S. திருமுருகனிடம் 19.12.2016 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி விசாரணையில், 2007ஆம் ஆண்டில் அனுமதி வழங்கப்பட்ட இத்திட்டம் செயல்படுத்துவதற்கு 20 ஆண்டு காலமாகும் என்றும், இரண்டு திரையரங்க உரிமையாளர்களைத் தவிர்த்து, வேறு யாரும் இத்திட்டத்திற்கு நிலம் தானமாக வழங்கவில்லை என்றும் குறிப்பிட்டார். மேலும், இத்திட்டத்தில் நிலம் கையகப்படுத்துவதற்கு எந்ததிட்டமும் வகுக்கப்படவில்லை என்பதுடன் நிலங்களை தானமாகப் பெறவேண்டும் என்ற சரத்தும் இல்லை எனவும் குறிப்பிட்டார்.

5. 1971 ஆம் ஆண்டு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம் பிரிவு 29ன் கீழ், 114.52 ஹெக்டர் நிலப்பரம்பில் திருப்பூர் விரிவு அபிவிருத்தித் திட்டம் எண்.7 க்கு நகர் மற்றும் ஊரமைப்புத் துறை இயக்குநர் 12.01.2007 நாளிட்ட தனது செயல்முறை எண். 27688/2004/DP2-ல் அனுமதி வழங்கியுள்ளார். மேலும் இத்திட்டத்தினை செயல்படுத்துவதற்குத் தேவையான நிலங்களைப் பெறுவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள திருப்பூர் உள்ளூர் திட்டக்குழு உறுப்பினர் செயலர் அறிவுறுத்தப்பட்டுள்ளார். திருப்பூர் விரிவு அபிவிருத்தித் திட்டத்திற்கு 2007 ஆம் ஆண்டில் ஒப்புதல் அளிக்கப்பட்டும், இத்திட்டம் செயல்படுத்தாத நிலையில் உள்ளதாகவே விசாரணையில் தெரியவருகிறது. திருப்பூர் மாநகராட்சி பொறியாளர்களுக்கும் இத்திட்டம் குறித்த முழுவிவரமும்

அறியாத நிலையிலேயே உள்ளனர். 24.11.2016 அன்று விசாரணையின்போது, மனுதாரருடைய நிலத்தில் கட்டிடம் கட்ட அனுமதி வழங்கும் அதிகாரம் மாநகராட்சிக்கு இல்லை என்றும் மனுதாரருடைய நிலத்தில் சாலை அமைப்பதற்கு, அந்நிலம் தானமாக வழங்கப்படவேண்டும் என்றும் நிலம் கையகப்படுத்துவது குறித்து எந்தவித முன்மொழிவும் வருவாய்த் துறைக்கு அனுப்பப்படவில்லை என திருப்பூர் மாநகராட்சி உதவிப்பொறியாளர் திரு. க. ஆறுமுகம் தெரிவித்துள்ளார். திருப்பூர் விரிவு அபிவிருத்தி திட்டத்திற்கு, 2007ஆம் ஆண்டில் அனுமதி அளிக்கப்பட்டும், இத்திட்டம் நடைமுறைப்படுத்தாதது குறித்து அரசுக்கோ அல்லது உயர் அதிகாரிகளுக்கோ எந்த தகவலும் தெரிவிக்கப்படவில்லை எனவும் தெரிவித்தார். திருப்பூர் மாநகராட்சி செயற்பொறியாளரிடம் 19.12.2016 அன்று மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது உள்ளூர் திட்டக்குழுமத்தால் தயாரிக்கப்பட்ட திட்டப்பணிகள் சம்பந்தப்பட்ட களப்பணியினை திருப்பூர் மாநகராட்சியால் மேற்கொள்ளப்படும் என்றும், இத்திட்டம் செயலாக்கம் குறித்து நிலஉடமையாளர்களுடன் நடத்தப்பட்ட கூட்டவிவரம் தனக்குத் தெரியாது எனத் தெரிவித்தார். இத்திட்டத்தில் நிலம் கையகப்படுத்துவது சம்பந்தமாக எந்ததிட்டமும் வகுக்கப்படவில்லை என்றும், தானமாகப் பெறுவதற்கும் திட்ட அறிக்கையால் வழிவகை செய்யப்படவில்லை எனவும் தெரிவித்தார். எனினும், இத்திட்டப்பகுதியில் அமையவுள்ள 60 அடி சாலை அமைப்பதற்குத் தேவையான நிலத்தினை சிவன் திரையரங்கு உரிமையாளர் திரையரங்கு உரிமம் பெறுவதற்காகவும், உரிமம் புதிப்பிப்பதற்கானக் காரணத்திற்காகவும் தானமாக அளித்துள்ளார். மற்றவர்கள் எவரும் தானமாக வழங்க முன்வரவில்லை எனவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

6. திருப்பூர் விரிவாக்க அபிவிருத்தித் திட்ட அறிக்கையினை பரிசீலிக்கப்பட்டதில் இத்திட்டத்தை செயல்படுத்துவதற்குத் தேவையான நிலங்களை கையகப்படுத்துவதற்கும், கிரயம் மூலம் பெறுவதற்கும் அல்லது வேறுவகையில் நிலஉடமைதாரர்களிடமிருந்து பெறுவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. ஆனால், மாநகராட்சிப் பொறியாளர்கள் இதுகுறித்த விவரங்களை அறியாமலும், உரிய விவரங்களைப் பொது மக்களுக்குத் தெரிவிக்காமலும் உள்ளனர். இத்திட்டம் துவக்கப்பட்டு பத்து ஆண்டுகளாகியும் தேவையான நிலத்தை கையகப்படுத்த மாநகராட்சிப் பொறியாளர்கள் எந்தவித முயற்சியும் மேற்கொண்டதாகத் தெரியவில்லை. முறையீட்டு மனுதாரர் கட்டிட அனுமதி வழங்கக் கோரும் இடம், அங்கீகரிக்கப்பட்ட விரிவு அபிவிருத்தித் திட்டச் சாலையில் அமைவதால் சம்பந்தப்பட்ட இடத்தினைத் தானமாக அளித்தால் மட்டுமே இத்திட்டச்சாலை முழுமைபெறும் என மாநகராட்சி தெரிவித்துள்ளது. முறையீட்டு மனுதாரர் தனது நிலத்தினைத் தானமாக வழங்க மறுக்கும் நிலையில் நிலத்தினை கையகப்படுத்தும் நடவடிக்கையினை சம்பந்தப்பட்ட துறை மேற்கொண்டதாகவும் தெரியவில்லை. இதுபோன்ற காரணங்களாலேயே இத்திட்டம் தொடங்கப்பட்டு பத்து ஆண்டுகளாகியும் துவக்க நிலையிலேயே உள்ளது. இதனால் சாலை அமையும் பகுதியிலுள்ள நிலவுடமைதாரர்கள் தங்களுடைய நிலங்களில் கட்டிடம் கட்ட அனுமதி பெறமுடியாமலும் நிலங்களை விற்கமுடியாமலும் அவதிக்குள்ளாகின்றனர். ஆனால் மாநகராட்சி பொறியாளர்கள் தங்களது வாக்குமூலங்களில் நிலத்தை விற்கவோ, வாங்கவோ எவ்விதத் தடையும் இல்லை எனத் தெரிவித்துள்ளனர். முறையீட்டு தாரரின் முறையீடு சம்மந்தப்பட்ட ஆவணங்கள், திட்ட அறிக்கை, மாநகராட்சிப் பொறியாளர்களின் வாக்குமூலங்கள் மற்றும் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை அனைத்தும் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டதில், பத்து ஆண்டுகளுக்கு முன்பு துவங்கப்பட்ட இத்திட்டம் துவக்க நிலையிலேயே உள்ளது. மாநகராட்சி அலுவலர்கள், இத்திட்டம் குறித்து முழுமையாக தெரிந்து கொள்ளாமலும், பொது மக்களுக்குத் தெரிவிக்காமலும் செயல்பட்டுள்ளனர். இதனால் பொது மக்களுக்கு சிரமமும், நிர்வாகத்தின் மீது அதிருப்தியும் ஏற்படக் காரணமாக அமைந்துள்ளது. திருப்பூர் விரிவு அபிவிருத்தித் திட்ட அறிக்கை எண்.7ல், VIII– பல்வகைத் தலைப்பின் கீழ், இனம் 27ல், நிலம் கையகப்படுத்துதல் குறித்து தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில் சம்பந்தப்பட்ட

திட்டப்பகுதியில் உள்ள பொதுமக்களை கலந்து விதிகளின்படி செயல்பட்டு நிலத்தைக் கையகப்படுத்துதல் மூலமாகவோ அல்லது தனியார்களிடம் பேச்சுவார்த்தை மூலமாகவோ நிலத்தினைப் பெற்று இத்திட்டத்தை செயல்படுத்த வேண்டும் அல்லது பத்து ஆண்டுகளாக துவக்க நிலையிலேயே உள்ள இத்திட்டத்தை செயல்படுத்த இயலாவிட்டால் மாற்று ஏற்பாடு செய்யவேண்டும். எந்த முடிவும் எடுக்கப்படாமலும், இத்திட்டத்தை செயல்படுத்தப்படாமலும் இத்திட்டப் பகுதியில் உள்ள பொதுமக்களை சிரமத்திற்குள்ளாக்குவது எவ்வகையிலும் ஏற்புடையதாய் இல்லை என இம்முறைமன்றம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2017 ஆம் ஆண்டு, பிப்ரவரி திங்கள், 23–ஆம் நாள், என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர். 24/2/2017

24/2/17

பெறுநர்

1. மாநகராட்சி ஆணையர்,
திருப்பூர் மாநகராட்சி,
திருப்பூர்.

2. திரு. C.J. ராஜ்காந்த்,
எண். 16, M.R.K. நகர்,
30 அடி சாலை, கொளப்பாக்கம்,
சென்னை–122.

3. உறுப்பினர் செயலர்,
திருப்பூர் உள்ளூர் திட்டக்குழுமம்,
திருப்பூர்.